# அறிமுகம்

எபேசியருக்கு எழுதிய நிருபமானது இன்றைய நாட்களில் சபையினால் கவனத்துடன் வாசிக்கப்பட வேண்டியதற்குத் தகுதியானதாக உள்ளது. நாம் அடையாளப்படுத்துவதின் இடர்ப்பாட்டின் மத்தியில் இருப்பவர்களாய் நம்மைக் காண்கின்றோம், அதிலும் சிறப்பாக, சபையின் இயல்பையும் கிறிஸ்துவுக்குள் நமது அழைப்பின் தனித் தன்மையையும் அடையாளப்படுத்துவதின் இடர்ப்பாட்டில் இருக்கிறோம். இன்றைய நாட்களில் சராசரியான சபை உறுப்பினர் சபையினிடம் உயர்தரமான மதிப்பீட்டைப் பிணைத்திருப்பதில்லை. எவ்வகையானதொரு சபையின் இணைவுமில்லாமலேயே தங்கள் சொந்த மதக் கண்ணோட்டங்களை அடையக் கூடுமென்று அமெரிக்கர்களில் 81 சதவிகிதம் பேர் நம்புகின்றார்கள் என்று புள்ளியியல் விவரங்கள் தெரிவிக்கின்றன.[1] சபை என்பது அவர்களின் வாழ்வில் காரணியற்ற தன்மை கொண்டதாக உள்ளது, அவர்கள் அக்கண்ணோட்டத்தில் பிரச்சனை எதையும் காணுவதில்லை. கிறிஸ்தவர்கள் பலரது சிந்தைகளில் கர்த்தரின் சபையானது அவர்களுக்கான தனது மிகுவனப்பை இழந்து போகின்ற அளவுக்கு இந்த எண்ணப்போக்கானது மெதுவாக ஆக்கிரமித்துள்ளது.

கர்த்தருடைய சபையின் பல உள்ளூர்க் குழுக்கள் உலகம் சார்ந்தவையாய் ஆகியுள்ளன என்பது, எபேசியருக்கு எழுதிய நிருபம் நம் கவனத்தைப் பெறத் தகுந்ததாயுள்ளது என்பதற்கு இன்னொரு காரணமாகும். சபையைப் பற்றிய தேவனுடைய கண்ணோட்டம் தவற விடப்பட்டுள்ளது. தேவன் தமது சபை எவ்வாறு இருக்கும்படி விரும்புகின்றார் என்பதைக் காண வேதாகமத்தை ஆய்வு செய்வதற்குப் பதிலாக, சிலர் சபைக்கென்று தாங்கள் தேர்ந்து கொள்கின்ற உருவகத்தின்படி அதை வடிவமைக்க விழைகின்றனர். உலகப் பிரகாரமான சமுதாயத்தில் பெருகி வரும் "தேவைகள்" மற்றும் "அக்கறைகள்" ஆகியவற்றினால் அதிகமதிகமாய் விவரிக்கப்படும் நோக்கமும் ஊழியமும் கொண்ட நிறுவனமாக சபையானது மாற்றப்பட்டு விடுகின்றது. கிறிஸ்தவர்களைக் கவருவதற்காகச் சபைக்குழுமங்கள் சந்தை ஆய்வு, தேவைகளை மதிப்பீடு செய்தல், மற்றும் திட்ட மேம்பாடு ஆகிய வற்றைச் செய்து கொண்டிருந்தாலும் அதற்கு நேர்மாறான வகையில் மக்கள் தங்கள் வாழ்வில் உயர்ந்த முன்னுரிமைகளின் பட்டியலில் சபையை வைப்பதில்லை.

எல்லாக் கிறிஸ்தவர்களும் சபைக்கான தங்கள் மதிப்பையும் அன்பையும் இழந்து போய் விடவில்லை என்பது நிச்சயம். கர்த்தருடைய சபையின் எல்லா உள்ளூர்க் குழுமங்களும் உலகப்படியான சிந்தனையில் மாறிப் போய் நிலைத்திருப்பதில்லை. எல்லா சபைகளும் தங்கள் தனித்தன்மையை இழந்து போயிருப்பதில்லை, ஆனால் தேவன் தமது சபை மற்றும் தமது மக்களுக்காகத் தம்முடைய சிந்தையில் கொண்டிருப்பவற்றைத் தவற விடும் அபாயத்தை எல்லாக் கிறிஸ்தவர்களும், எல்லா உள்ளூர் சபைக்குழுமங்

களும் எதிர்கொள்ளுகின்றன. சபை என்பது மக்கள் - மீட்கப்பட்ட மக்கள் -என்பதை எபேசியருக்கு எழுதிய நிருபமானது நமக்கு நினைவு படுத்துகின்றது. சபையானது தேவனுடைய புதிய மனுக்குலமாயிருக்கிறது. இதனுடைய மகிமையை எபேசியருக்கு எழுதிய நிருபம் உறுதிப் படுத்துகின்றது. இது சபையின் இயல்பு பற்றிய பவுலின் விவரிப்பை இந்த அற்புதமான புதிய மனுக்குலத்தின் இயல்பு என்ற வகையில் உள்ளடக் குகின்றது. அவர் கிறிஸ்தவர்களை தேவன் கிறிஸ்துவுக்குள் இருக்கும்படி கொண்டு வந்துள்ள புதிய மனுக்குலமாக வாழும்படி அழைத்தார்.

புதிய ஏற்பாட்டின் நிருபம் ஒன்றிடம் நாம் வரும் போதெல்லாம், அடிப்படையான ஐந்து கேள்விகளுக்குப் பதில் அளிக்கப்பட வேண்டி யுள்ளது: (1) அந்த நிருபத்தை எழுதியது யார்? (2) யாருக்கு அது எழுதப் பட்டது? (3) அது எப்பொழுது எழுதப்பட்டது? (4) அது ஏன் எழுதப் பட்டது? (5) அதன் அடிப்படைச் செய்தி என்ன? எபேசியருக்கு எழுதிய நிருபம் பற்றியும் தேவனுடைய புதிய மனுக்குலத்தைப் பற்றி அது கூறுவதற்குக் கொண்டுள்ளதென்ன என்பதைப் பற்றியும் நமது படிப்பை நாம் தொடங்கு முன்பு நாம் இந்தக் கேள்விகளுக்குப் பதில் அளிக்கச் சற்று நேரம் எடுத்துக் கொள்வது அவசியமாகும்.

## எழுத்தாளர்

எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் முதல் வசனமே அதன் எழுத்தாளரை அடையாளப்படுத்துகின்றது: "தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலனாகிய பவுல், எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதுகிறதாவது: நம்முடைய பிதாவாகிய தேவனாலும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும், உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக" (1:1, 2). கடிதங்களை எழுதத் தொடங்குகையிலேயே அவற்றை எழுதுபவர்கள் தங்களை அடையாளப்படுத்திக் காட்டுவது என்பது முதல் நூற்றாண்டில் பொதுவான ஒரு வழக்கமாய் இருந்தது. அந்த நடைமுறையைப் பவுல் பின்பற்றினார்.

இயேசு பன்னிருவருக்குக் கொடுத்திருந்த பட்டம் ஒன்றைப் பவுல் தமக்கு(ம்) உரிமைகோரினார் (லூக். 6:12, 13). அவர் சிறப்பாய்த் தேர்ந்து கொள்ளப்பட்டவரும், அதிகாரத்துவமான செய்தியை அளிக்க அனுப்பப் பட்டவருமான "அப்போஸ்தலராக" (Gk.: *apostolos*) இருந்தார். பவுல் எழுதியவற்றிற்குப் பின்னால் அதற்கான அதிகாரம் இருந்தது. அது பவுலின் சொந்த கொள்கைகள், கருத்துக்கள், அல்லது ஆலோசனைகள் என்பதைக் காட்டிலும் மேலானதாயிருந்தது. அவர் கொடுத்த செய்தியானது அவருக் குள்ளிருந்து தோன்றியிருந்ததில்லை; பவுலின் செய்தியானது அவருக்கு இயேசு கிறிஸ்துவால் கொடுக்கப்பட்டிருந்தது. அவரது எழுத்துக்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வார்த்தைகள் மற்றும் அறிவுறுத்தல்கள் என்பதாகவே பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

பவுல் தமது அப்போஸ்தலத்துவமானது ஏதோ தாமாகவே ஏற்படுத்திக்

*கொண்டதாக இருந்ததில்லை என்பதைத் தமது வாசகர்கள் அறியும்படி அனுமதித்தார். அவர் அந்தப் பதவிக்காக விண்ணப்பித்திருந்ததில்லை. எந்த ஒரு சபையும் அவரை அதற்கு நியமித்திருந்ததில்லை. அதற்குப் பதிலாக, அவர் மிக உயர்ந்த அதிகாரத்தின் அடிப்படையில் ஒரு அப்போஸ்தலரா யிருக்கும்படி வந்தார்: பிதாவாகிய தேவனுடைய சித்தத்தினாலே இயேசு கிறிஸ்துவின் கட்டளையினால்.*

*எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நாம் படிக்கும் பொழுது, நம்மை நாமே பரிசுத்த களத்தில் நிற்பவர்களாய்க் காண வேண்டும். நாம் வாசிக் கின்ற வசனங்கள் வெறுமனே அழிந்து போகின்றவர்களின் வார்த்தைகளாக இருப்பதில்லை. அவை தேவனுடைய வார்த்தைகளாக உள்ளன. அப்போஸ்தலரான பவுல் எழுதியவற்றின் மூலம் தேவனே நம்மிடம் பேசுகின்றார்.*

## பெற்றுக் கொண்டவர்கள்

*இந்த நிருபமானது, "எபேசுவில் கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளா யிருக்கிற பரிசுத்தவான்களுக்கு" எழுதப்பட்டது. பவுல் தமது வாசகர்களைப் பற்றி என்ன கூறினார் என்பதைக் கவனியுங்கள்.*

*முதலாவது, அவர்கள் "பரிசுத்தவான்களாய்"* (Gk.: *hagios*) *இருந்தார் கள். இந்த வார்த்தையானது மற்ற யாவருக்கும் மேலாக இருக்கின்ற(னர் என்ற வகையிலான) கிறிஸ்தவர்களின் ஒரு விசேஷித்த வகுப்பினரைக் குறிப்பதில்லை. பரிசுத்தவான்கள் என்பவர்கள் சாதாரண கிறிஸ்தவர் களுக்கு மேலாக பரிசுத்த தன்மை உயர்ந்து காணப்படும் ஒரு விதிவிலக்கான கிறிஸ்தவர்களின் சிறு குழுவினர் என்பதாக இருப்பதில்லை. "பரிசுத்தவான்" என்பது ஒவ்வொரு கிறிஸ்தவருக்கும் பொருந்துகின்ற ஒரு பட்டம் ஆகும். தேவனுடைய பிள்ளையாய் இருக்கிற ஒவ்வொருவரும் அவன் அல்லது அவள் தாம் தேவனுக்குரியவராகப் பிரித்தெடுத்து வைக்கப்பட்டுள்ள கருத்தில் ஒரு பரிசுத்தவானாகவே இருக்கின்றார். இச்சொற்றொடரானது முதன்முறையாக இஸ்ரவேல் இனத்தை விவரிப்பதற்குப் பயன்படுத்தப் பட்டது. இஸ்ரவேல் "பரிசுத்த இனமாக" இருந்தது. இப்பொழுது இந்தச் சொற்றொடரானது கிறிஸ்துவின் மூலம் தேவனுக்குரியவர்களாகும்படி வந்துள்ள எல்லா மக்களையும் உள்ளடக்குகின்றது. கிறிஸ்துவுக்குள்ளான தேவனுடைய புதிய மனுக்குலமே இப்பொழுது தேவனுடைய இஸ்ர வேலாக உள்ளது (கலா. 6:16).*

*இரண்டாவது, அவர்கள் "விசுவாசிகளாய்"* (Gk.: *pistos*) *இருந்தனர். வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், பவுல் தமது வாசகர்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் தங்கள் விசுவாசத்தை வைத்திருந்தவர் களாய்க் கருதினார். அவர்கள் அவிசுவாசிகளுக்கு நேர் மாறான வகையில் கிறிஸ்துவில் விசுவாசிகளாய் இருந்தார்கள்.*

*மூன்றாவதாக, அவர்கள் "கிறிஸ்து இயேசுவுக்குள்" இருந்தார்கள். இந்தத் திறவுகோல் சொற்றொடர் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் வசனம் 1ல் தோன்றுகின்றது. தேவனுடைய புதிய மனுக்குலமானது*

“கிறிஸ்துவுக்குள்” தனது வாழ்வில், அதன் இருப்பையும் அனுபவங்களையும் கொண்டுள்ளது. “கிறிஸ்துவுக்குள்” இருத்தல் என்பது திராட்சச் செடியுடன் இணைக்கப்பட்ட கிளைகள் அல்லது உடலுடன் இணைக்கப்பட்ட உறுப்புகள் போன்று அவருடன் ஒன்றுபட்டிருத்தலாக உள்ளது. கிறிஸ்தவர்கள் தங்கள் நம்பிக்கையைக் கிறிஸ்துவின்மேல் வைக்கின்றார்கள் மற்றும் அவர்மீது நம்பிக்கையைக் காண்பிக்கிற வாழ்வை வாழ முயற்சிக்கின்றார்கள்.

கடைசியாக, இதை(இந்நிருபத்தை)ப் பெறுகின்றவர்கள் “எபேசுவில்” இருந்தார்கள். எபேசு என்பது ஆசியாவின் ரோம மாகாணத்தின் தலைநகரா யிருந்தது, மற்றும் அது ஒரு மிகப் பெரிய, மக்கள் கூட்டம் மிகுந்த, வர்த்தகத் துறைமுகமாய் இருந்தது. மேலும் அது புறதெய்வ வணக்கத்தவர்களின் பெண் தெய்வமான ஆர்ட்டெமிஸ் (தியானாள்) என்பவளை ஆராதிப் பதற்கான மையமாகவும் இருந்தது. அவளைக் கனப்படுத்தும் வகையில் அங்கு கட்டப்பட்ட கோவிலானது உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்று என்று இன்றும் கருதப்படுகின்றது.

பவுல் முதல் முறையாக எபேசுவுக்கு தமது இரண்டாம் ஊழியப் பயணத்தின்போது குறுகிய காலப் பயணமாக வந்திருந்தார் (அப். 18:18-21). பிற்பாடு அவர் அங்கு மீண்டும் வந்து தமது மூன்றாம் ஊழியப் பயணத்தின் போது அங்கு இரு ஆண்டுகளுக்கும் மேலாகத் தங்கியிருந்தார். அவர் யூத ஜெப ஆலயத்தில் மூன்று மாதங்கள் அளவாகப் போதித்த பிறகு, வேறெங்காவது செல்லும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு, திறன்னுவின் பள்ளியில் போதிக்கத் தொடங்கினார் (அப். 19:8, 9). பவுல் ஒரு கூடாரத் தொழிலாளி யாக வேலை பார்த்து தம் தேவைகளைக் கவனித்துக் கொண்டார். அவருடைய போதனையைப் பற்றிய செய்தியானது அப்பகுதி முழுவதிலும் பரவிற்று (அப். 19:10). அற்புதங்கள் நடைபெற்றன. பவுலினால் தொடப் பட்டிருந்த உறுமால்கள் மற்றும் கச்சைகள் ஆகியவை நோயாளிகளைக் குணப்படுத்தப் பயன்படுத்தப்பட்டன (அப். 19:11, 12). யூத மந்திரவாதி களாலும் கூட (அப். 19:13-16) அசுத்த ஆவிகள் இயேசுவின் பெயரால் துரத்தப்பட்டன. மனம் மாற்றப்பட்ட புறதெய்வ வணக்கத்தார்கள், தங்கள் பொல்லாத கிரியைகளை விட்டு விட்டு தங்கள் பில்லிசூனியப் புத்தகங் களை எரித்தார்கள் (அப். 19:18-20). இதன் விளைவாக, கடைசியில், திமெத்திரியு என்ற தட்டான், பவுலின் வெற்றியானது அந்நகரின் பொருளாதார வளத்திற்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தும் என்ற குற்றச்சாட்டை முன்வைத்தபொழுது, அங்கு ஒரு கலகம் எழும்பிற்று. பெண் தெய்வமான ஆர்ட்டெமிஸ் (என்பவளின் கோவில் போன்று) வெள்ளிச் சிற்பங்கள் செய்து அவைகளை விற்பனை செய்யும் தொழிலானது பவுலின் பிரசங்கத் தினால் பாதிக்கப்பட்டது (அப். 19:23-41). இது கடைசியில், பவுல் அங்கிருந்து புறப்பட்டுச் செல்லக் காரணமாயிற்று, ஆனால் சபை அங்கு உறுதியாக நிலைநாட்டப்படுவதற்கு முன்பு அவர் அங்கிருந்து செல்லவில்லை.

பவுல் மீண்டும் எபேசுவுக்கு ஒருக்காலும் வந்ததில்லை, ஆனால் எருசலேமுக்கு அவர் திரும்பிச் சென்று கொண்டிருந்த பொழுது எபேசுவின்

*மூப்பர்களை அவர் மிலேத்து துறைமுகத்தில் சந்தித்தார். அவர்களுக்கு அவர் இருதயத்தை அசையச் செய்யும் பிரியாவிடை உரையாற்றினார் (அப். 20:13-38).*

*"எபேசுவில்" என்ற குறிப்பிடுதலானது தொடக்க காலக் கைப்பிரதி களில் இல்லை என்பது இவ்விடத்தில் கவனிக்கப்பட வேண்டும். இது எபேசுவுக்கு மட்டுமின்றி, ஆசியா மைனர் பகுதியில் இருந்த சபைகள் யாவற்றுக்கும் ஒரு சுற்றறிக்கை நிருபமாய் நினைக்கப்பட வேண்டும் என்று சிலர் யோசனை தெரிவித்துள்ளனர். மேலும் பவுல் எபேசுவில் நீண்ட நாட்கள் தங்கியிருந்த வேளையில் சந்தித்து (பழகி) இருக்கக் கூடிய குறிப்பிட்ட தனிநபர்களுக்கான அவருக்கே உரிய பாணியிலான வாழ்த்துக் களும் எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் காணப்படுவதில்லை. இந்த நிருபமானது பொதுவான அனுபவங்களைக் குறிப்பிடுவதில்லை. பவுலின் பிற நிருபங்களில் நாம் எதிர்கொள்ளுகின்ற தனிப்பட்ட குறிப்புகளின் வகையும் கூட இந்த நிருபத்தில் குறைவுபடுவதாகக் காணப்படுகின்றது. இது, சிலரை எபேசியருக்கு எழுதிய நிருபம் ஒரு சுற்றறிக்கைக் கடிதம் தான் என்ற கருத்துக்கு ஆதரவு தெரிவிக்க வைத்திருக்கலாம். ஆயினும், (இந்நிருபத்தைப்) பெற்றுக் கொள்பவர்கள் உண்மையில் வாழும் புவியியல் பகுதியானது இதன் அடிப்படைச் செய்தியை மாற்றுவதில்லை. இந்த நிருபமானது எல்லா இடங்களிலும் எல்லாக் காலங்களிலும் உள்ள சபைக்கான செய்தியாக உள்ளது.*

## தேதி

*பவுல் தாம் ஒரு கைதியாக இருந்து இந்நிருபத்தை எழுதியதாக இதில் மும்முறை குறிப்பிடுகின்றார் (3:1; 4:1; 6:20). இது சிறை நிருபங்கள் நான்கில் (எபேசியர், பிலிப்பியர், கொலோசெயர் மற்றும் பிலேமோன்) ஒன்று என்று நீண்ட காலமாகக் கருதப்பட்டு வந்துள்ளது. குறிப்பிட்ட இந்தச் சிறை வாசத்தின் (கி.பி. 60-62) இடம் ரோமாபுரியாய் இருந்தது என்று நாம் நம்புவதற்கு நல்ல காரணம் உள்ளது. பவுல் ரோமாபுரிச் சிறையில் இரு ஆண்டுகளைச் செலவிட்டார் (அப். 28:16-31). மற்றும், பாரம்பரியமானது -தொடக்க கால சபையிலிருந்து பதினெட்டாம் நூற்றாண்டு வரை- ரோமாபுரியை சிறை நிருபங்களின் தொடக்க இடம் என்று எப்பொழுதுமே கருதியுள்ளது.*

*பவுலைக் காண்பதற்கும் கொலோசெ சபையைப் பற்றிய கலவர மூட்டும் செய்தி சிலவற்றை அப்போஸ்தலருக்கு அறிவிக்கவும் எப்பாப்பிரா வந்தார். கள்ள போதனையானது அந்த சபையை அழித்துக் கொண்டிருந்தது என்பது உறுதி, எனவே பவுல் கொலோசெயருக்கு ஒரு நிருபத்தை எழுதினார். மேலும் அவர் அந்த சபையின் உறுப்பினராயிருந்த பிலேமோன் என்ற பெயர் கொண்டவருக்கு தனிப்பட்ட நிருபம் ஒன்றையும் எழுதினார். அது பிலேமோனின் உடமையாயிருந்திருந்த, சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிந்து தனது எஜமானரிடத்தில் திரும்பி அனுப்பப்பட்ட ஒனேசிமு என்ற அடிமையைப் பற்றியதாக இருந்தது. இதே வேளையில்தான், எபேசுவில்*

*இருந்த சபைக்கோ அல்லது ஆசியாவின் ரோம மாகாணத்தில் இருந்த சபைகளுக்கோ எபேசியருக்கு எழுதிய நிருபம் எழுதப்பட்டது. இம்மூன்று நிருபங்களுமே பவுலின் "பிரியமான சகோதரனும் கர்த்தருக்குள் உண்மையுள்ள ஊழியக்காரனுமாய்" (6:21) இருந்த தீகிக்குவால் கையளிக்கப் பட்டன. இதே ரோமச் சிறையிருப்பின் வேளையில் இன்னொரு சமயத்தில் பிலிப்பியருக்கு நிருபம் எழுதப்பட்டது என்பது தெளிவு.*

## நோக்கம்

*எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நாம் வாசிக்கும் பொழுது, இரண்டு முதன்மையான நோக்கங்களை நாம் உய்த்துணர முடிகின்றது. முதலாவது, பவுல், தேவனுடைய புதிய மனித குலமான சபையின் தோற்றம், யூதர் மற்றும் புறஜாதியார் ஆகியோரிலிருந்து இரட்சிக்கப்பட்டவர்களை அடக்கி யுள்ளமை, மற்றும் அதன் நித்திய நோக்கம் (அதிகாரங்கள் 1-3) ஆகிய வற்றைக் காண்பிப்பதினால் சபையின் இயல்பை விளக்கப்படுத்த விரும்பினார். இரண்டாவது, பவுல் தேவனுடைய புதிய மனித குலத்தைத் தகுதியானபடி நடந்து கொள்ளும்படி (அதிகாரங்கள் 4-6) அழைப்பு விடுத்தார். தகுதியான நடக்கை என்பது கிறிஸ்துவின் சரீரத்தில் ஒருமைப் பாட்டின் மீது மிக உயர்வான முன்னுரிமை இடுதலை (4:1-16) உள்ளடக்கி, அன்றாட வாழ்வில் தேவபக்தியைத் தீவிரமாய்த் தேடி (4:17-6:9), வழிநெடுகிலும் சாத்தானுடைய எதிர்ப்பை ஜாக்கிரதையுடன் எதிர் கொள்ளுதல் ஆகியவற்றையும் (6:10-20) உள்ளடக்குகிறது. (இப்புத்தகத்தில் இந்நிருபத்தின் முழுமையான வரைக்குறிப்பொன்று இடம் பெற்றுள்ளது.)*

## செய்தி

*எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் மையக் கருத்தானது பின்வரும் வசனங்களில் பதியப்பட்டுள்ளது:*

> *... இருதிறத்தாரையும் தமக்குள்ளாக ஒரே புதிய மனுஷனாகச் சிருஷ்டித்து, இப்படிச் சமாதானம்பண்ணி, பகையைச் சிலுவை யினால் கொன்று, அதினாலே இருதிறத்தாரையும் ஒரே சரீரமாகத் தேவனுக்கு ஒப்புரவாக்கினார். ... தேவன் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவுக்குள் கொண்டிருந்த அநாதி தீர்மானத்தின்படியே, உன்னதங்களிலுள்ள துரைத்தனங்களுக்கும் அதிகாரங்களுக்கும் அவருடைய அநந்த ஞானமானது சபையின் மூலமாய் இப்பொழுது தெரியவரும் பொருட்டாக (2:15ஆ, 16; 3:9, 10).*

*பழைய மனுக்குலத்தின் மத்தியிலிருந்து தேவனுடைய புதிய மனுக் குலத்தை இயேசு கிறிஸ்துவின் மூலமாய் இரட்சிக்கும் தேவனுடைய செயலின் மீதே இதன் முதன்மைச் செய்தியானது மையங்கொண்டுள்ளது. இந்த நிருபமானது, "கிறிஸ்தவ உபதேசத்தையும் கிறிஸ்தவ கடமையையும், கிறிஸ்தவ விசுவாசத்தையும், கிறிஸ்தவ வாழ்வையும், கிறிஸ்துவின் மூலம் தேவன் செய்துள்ளவற்றையும், அதன் விளைவாக நாம் எவ்வாறு இருக்க*

*வேண்டும் மற்றும் என்ன செய்ய வேண்டும் என்பவற்றையும் இணைக்கின்றது.”[2]*

## *முடிவுரை*

*கிறிஸ்தவராயுள்ள தனிநபர்களுக்கும், கர்த்தருடைய சபையின் குழுமங்களுக்கும், எபேசியருக்கும் எழுதிய நிருபத்தைப் பற்றிய படிப்பானது எவ்வளவு குறிப்பிடத் தக்கதாக இருக்க முடியும் என்பதை ஆழ்ந்து சிந்தியுங்கள். இது—தேவனுடைய புதிய மனுக்குலமான—சபையின் இயல்பையும் தனிச்சிறப்பையும் விளக்குவதற்கு மிகச் சிறந்த புத்தகமாக நிலைத்துள்ளது. எபேசியருக்கு எழுதிய நிருபத்தின் படிப்பை மக்கள் மூன்று வழிமுறைகளில் அணுக முடியும்:*

*சிலர், எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நீண்ட காலத்திற்கு முன்பு வாழ்ந்த மக்களுக்கு எழுதப்பட்ட நிருபம் என்ற வகையில் வாசிக்கின்றனர், எனவே அவர்கள் அதில் இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்களுக்கு அடங்கியுள்ள செய்தியை கவனிக்கத் தவறுகிறார்கள். அவர்கள் எபேசியருக்கு எழுதிய நிருபத்திற்கான படிப்பை, ஒரு பழங்கால ஆவணத்தின் படிப்பு மற்றும் அதில் தற்காலத்திற்கு ஏற்புடைய கருத்து எதுவுமில்லை என்பதைத் தவிர வேறு எதுவுமாக மேற்கொள்ளுவதில்லை. நாம் இதை இவ்வாறு அணுகுவோமென்றால், பெரும்பாலும் நாம் இதன் செய்தியைத் தீவிரமானதாக எடுத்துக் கொள்ளமாட்டோம் மற்றும் இந்தப் படிப்பில் நாம் சலிப்பு கூட அடைய நேரிடலாம்.*

*மற்றவர்கள், எபேசியருக்கு எழுதிய நிருபத்தை படிப்பிற்கான உபதேசப் பாடம் என்ற வகையில் வாசிக்கின்றனர், எனவே இன்றைய நாட்களின் கிறிஸ்தவர்களுக்கான அதன் செய்தியில் பாதியைக் கவனிக்கத் தவறி விடுகின்றனர். எபேசியருக்கு எழுதிய நிருபத்தில் உபதேசத்தின் மாபெரும் அளவு அடங்கியுள்ளது. இது சபையைப் பற்றியும் மனிதரை இரட்சிக்க தேவனுடைய திட்டம் பற்றியும் அடிப்படை இறையியல் கருத்துக்கள் சிலவற்றை முன்னிறுத்துகின்றது. எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நாம், உபதேசத்தின் மீதான பாடபுத்தகம் மட்டுமே என்ற வகையில் அணுகி, அது அளிக்கின்ற நடைமுறைப் பயன்பாடுகளைக் காணாமல் விட்டோமென்றால், நாம் அதன் செய்தியில் பாதியை மட்டுமே பெறுவோம். இந்த அணுகுமுறையானது நாம் இந்நிருபத்தின் முதன்மையான இலக்கு ஒன்றை—தேவனுடைய புதிய மனுக்குலத்தில் பங்கு கொள்ள வந்துள்ள மக்கள் என்ற வகையில் நமது வாழ்வை மாற்றுதல் என்பதை—தவற விடுவதற்குக் காரணமாகிவிடும்.*

*எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நாம், தேவனிடத்திலிருந்து நமக்கு வந்த செய்தி என்ற வகையில் வாசிப்போமாக. எபேசியருக்கு எழுதிய நிருபத்தை நாம் இவ்விதமாய் அணுக வேண்டும் என்றுதான் தேவன் விரும்புகின்றார். இது தேவனுடைய வார்த்தையாய் இருக்கிறது. நாம் இந்த எண்ணப்போக்குடன் இதை அணுகுவோமென்றால், நாம் மாறிய மக்களாக வருவோம். அதைத்தான் தேவன் விரும்புகின்றார். அதுவே உங்களுக்கு*

*நடக்க வேண்டும் என்று நான் ஜெபிக்கின்றேன். இந்த அற்புதமான புத்தகத்தினூடே நீங்கள் ஒரு பயணத்தைத் தொடங்கும் (இவ்)வேளையில் தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக!*

---

*குறிப்புகள்*

[1]Robert Bellah, *Habits of the Heart* (New York: Harper and Row, 1985), 221. [2]John R.W. Stott, *The Message of Ephesians: God's New Society,* The Bible Speaks Today, gen. ed. John R.W. Stott (Downers Grove, Ill.: Inter-Varsity Press, 1979), 25.